ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1780/15 - 2012 ඔක්තෝබර් 16 වැනි අඟහරුවාදා - 2012.10.16
*1780/15 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள்

*நியதிச்சட்ட முறையிலான விதிப்பு இலக்கம் : 4623*
*விசேட இலக்கம் : கொ/ 1941.*

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

*13 ஆம் பிரிவின் கீழான நியதிச்சட்ட முறை விதிப்பு*

*கொழும்பு 3, இல. 8/7, பகதலே டெரஸ்ஸில் வசிக்கும் திரு. தொன் சலமன் கொதலாவலயினால் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் நியதிச்சட்ட முறையானதொரு பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது அவர் காலமாகி உள்ளதால் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த ஆணைக்குழுவினால் நியதிச் சட்டமுறையான குத்தகைக்காரருக்கு சொந்தமாகவிருந்த கமத்தொழில் காணிகளில் அவர் வைத்திருக்க அனுமதி வழங்கவேண்டிய பகுதியை நிர்ணயித்து அவரின் மரணசாதனச் சொத்துக்கு சட்டமுறையானதொரு விதிப்பு விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நியதிச் சட்ட முறையான குத்தகைக்காரருக்கு வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்ட கமத்தொழில் காணிப் பகுதிகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.*

*(சட்டத்தரணி) நிமல் ஜீ. புஞ்சிஹேவா,*
*தவிசாளர்,*
*காணிச்சீர்திருத்த ஆணைக்குழு.*

*காணி சீர்திருத்த ஆணைக்குழு,*
*இல. சீ 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,*
*கொழும்பு 7,*
*2012, யூன் 29.*

**அட்டவணை**

1. *கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவின் வந்தாருமூலை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட ஆரம்ப வரைபட இல. மட 579 இல் காட்டப்பட்டுள்ளதுமான றொக்வுட் எனும் காணியில் 4 ஏக்கர் 0 றூட் 23 பேர்ச்சுகள் அளவு கொண்ட 1 ஆம் இலக்க, காணித்துண்டும் அதனுள்ளடங்கிய சகலதும்.*

2. *வட மேல் மாகாணம் குருநாகல் மாவட்டத்தின் குருநாகல் பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவின் திரகன்தஹய கிழக்கு கோறளை தொரடியாவை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட ஆரம்ப வரைபட இல. கு 677 இல் காட்டப்பட்டுள்ளதுமான தொரடியாவ தோட்டம் எனும் காணியில் 44 ஏக்கர் 0 றூட் 38 பேர்ச்சுகள் அளவு கொண்ட 1 ஆம் மற்றும் 2 ஆம் இலக்க காணித்துண்டுகளும் அதனுள்ளடங்கிய சகலதும்.*

3. *ஊவா மாகாணம் பதுளை மாவட்டத்தின் பதுளை பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவின் ஹங்வெல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட இறுதி கிராம வரைபட இல. 80 மேலதிக இல. 23 இல் காட்டப்பட்டுள்ளதுமான பட்டிய கும்புர மற்றும் கிதுல கும்புர எனப்படும் நிடொல எனும் வயற் காணியில் இருந்து பிரிவிடாத 01 ஏக்கர் 0றூட் 26 பேர்ச்சுகள் அளவு கொண்ட 137, 138 ஆகிய இலக்க காணித்துண்டுகளும் அதனுள்ளடங்கிய சகலதும்.*

*11- 104*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.